ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வெண்மணி

நாராயணபாரதியாரால் செய்யப்பட்ட

மணவாள நாராயணசதகம் என்னும்

# திருவேங்கட சதகம்.

இஃது

கோகுளாபுரம்,

அருணஜலமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டபிரதிக்கிணங்க

## தி. இரத்தினமுதலியார்.

அண்டுஸன் அவர்களாற்றமது

சென்னை

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

இதன்விலை அணா 2

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மணவாளநாராயணசதகம் என்னும்

# திருவேங்கடசதகம்.

## காப்பு.

செந்திருவாழ் மார்பன் றிருவேங்கடசதகம்
பைந்தமிழா லீதிநெறி பாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

## தனியன்.

ஒங்குதண்டலைசூழ் மேகமலைதேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
னுதவுமணவாளநா ராயணன்களமூரி
னுலகநீதிக் கேட்கமுன்
தெங்குநீர்வயல்சூழும் வெண்மணியில்வாழுமுயர்
செல்வன்முத் தாரையனார்
செழுந்தவமுதித்தநா ராயணப்பாரதித்
திருவேங்கடச் சதகமே
பாங்குபெறுமுலகுளோர்க் கிருகண்பணியகவிருட்
பானுவிரு வழிவிழியதாம்
பவக்கடல்கடக்கவரு வங்கமாம்பொங்குமொழி
பரவுமெய்ஞ் ஞானவழியாம்
சங்கிதபாத்துணைய தாமிதைப்படிப்பவர்க
ளியல்வேங்க டேசரன்ற
ளிசையருளையுற் றுநல மேபெருகிவாழுமவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

நூல்,

## கடவுள்வாழ்த்து.

பூமேவுதிசைமுகனை யுந்திதனிலீன்றதும்
புகிதிவே தாகமமெலாம்
புருஷோத்தமன்றெய்வ மென்பதும்பூசுரர்கள்
புரியுமந் திரகருமமும்
சேமேவுமலர்மங்கை மார்பில்வளர்சீருஞ்
செகந்தனைக் காத்தருள்வதுந்
தேவர்முதன்மிர்கசெந்து பட்சிசிலைமரமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவுபொருளலங்காரஞ் சிறப்பதும்
பலவிதமு நீயென்றதாற்
பரதெய்வமுண்டென் றிருப்பார்களென்றால்
படித்தவிதமோ தெரிகிலேன்
மாமேவுபைந்துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அந்தணர்சிறப்பு.

சீலமிகுமாகம புராணமனுநீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்றயாகாதி மந்தரகருமங்களாற்
றேவர்க்கு முதவிசெய்வார்
காலமுதலாகிய ப்ரமாணங்களங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரிமகிமையாற் சகலதீவினைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசைதிங்கண்மும் மாரியுங்கொற்றவர்
நடாத்துசெங் கோல்வளமையு
நாடுகள்செழிப்பதுஞ் சகலதருமமும்வேத
நாயகர் மகத்துவங்காண்

# திருவேங்கடசதகம்.

வாலகருடன்பண்டு கண்டகதையல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அரசர்சிறப்பு

சீருலவுமனுநீதி மந்திரிசொற்றன்புத்தி
தேசத் தியற்கைநான்குஞ்
சேர்ந்துசெவிவிழிமனது மூன்றினும்பொருமை
சேர்ந்துசெங் கோல்செலுத்தித்
தாருலவுகமலமுங் குமுதமுங்காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடுமுதலைபொரு நான்பலமுங்கண்டு
தரிபலரை வெற்றிகொண்டு
பாருலவுசெடிசேனை தனதானியஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன்மங்களோடு கீர்த்திப்ரதாபம்
படைத்திற லோனரசனும்
வாருலவுதனமங்கை மணமகிழுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வணிகர்சிறப்பு

திடமுடன்றன்மன தறிந்துவாணிபதே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய்பார்யாவர் வருகினுங்கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடகுதந்தாலுமரி யாதையில்லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரனமனுநீதியுடை யோர்களுரைவாய்மையா
ளவிலர்ப் பொருள்கொடுப்பார்

# திருவேங்கடசதகம்.

கிருதனிலெட்டிலொரு கூறுவரவெனினுங்
கலைக்குமுறை தன்னில்வருவார்
காரியவிசேஷமதி லொருகோடியுதவுவார்
கருணைவர்க் ககர்பெருமைகாண்
வடமலைதினம்பரவு தென்மலைக்கதிபனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வேளாளர்சிறப்பு

உத்தமர்கள் கருமமுஞ் சகாசர்புசபலமு
மவனிவர்த்தக லாபமு
மனைவாக்குமேன்மையுந் தருமமுந்தானமும்
மன்புயுங் கையரின்பமும்
புத்திதெளிவியமுஞ் சாத்திரமுமாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாதவுண்மையுங் கீர்த்திப்ரதாபமும்
புகழ்கின்ற தேவர்நிலையும்
விச்சைதபுரிமானமுங் குலமரபுகீர்த்தியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர்குலமேபுனை காராளர்தங்களுடை
மேழியின் பெருமையன்றோ
மத்தரமெனும்புய சவுந்தரமுகுந்தனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## புருஷராய்ப்பிறந்தோர் பெரும்பயன்

புருஷராய்ச்சனனமெடுத்தபேர்மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
ஹரியொடுமெச்சகதனை வாறுவதொன்றலது
பூவலஞ் செய்வதொன்று

# திருவேங்கடசதகம்.

தருமவானென்றுமிகு கீர்த்தியானென்றுநற்
சற்குண விவேகியென்று
சகலரும்புகழ்கின்ற வித்துவானென்றுரண
சங்கிராம வீரனென்று
கருணைசேரிங்கவனைக யில்லாதமனிதரைக்
காசினியி லேன்படைத்தாய்
கருதுதாயுதரமும் பார்க்கின்றபேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
பருவுலாவியதுளப மாலையணிமார்பனே
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே.

## நகுச்சிறப்பு

பாதிதப்பாமல் வேசியர்களாடலும்
பாடலும் பெருகோயிலும்
பலவாவியுடன்பங் கேட்டையரணங்களோடு
பலர்மேவு கடைவீதியும்
இரதகஜதுரகப்ப தாதிசதுரங்கபல
மேர்கின்ற தளகர்த்தரும்
மென்னமிகுமந்திரிப்ர தானிதானுபதிய
ரியலுத்தி யோகசனமும்
விரதமறையோராதி நாற்குலமுமொன்றென்று
மிக்கசோடச தானமு
மேலாய்ச்சமீபித்த நதியுமாய்மருந்தி
வேந்தனும் பெருபட்டணம்
வரதருறைசிரங்க பட்டணமெனச்சொல்வர்
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராய

## அரசர்க்குரியதொழிலாளரியல்பு

காரியாகாரியங் கொற்றவர்தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந்தன்பலமு மெண்ணியிகல்வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரியதனங்களொடு ராச்சியஞ்சகலமுந்
திட்டமிடுவோன் ப்ரதானி
செய்யவாசகத்தாட்டி யவதானவக்கணை
சிறக்குமவ னேராயசன்
சூரியன்றிசைமாறி னுந்தான்றொடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வன்மைசபைவன்மைபராசர்வன்மைதெ
கழுசேனை தானுபதி
மாரியதுகாத்தருளு மணிமேகவண்ணனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## இதனாலிஃதுள தாமெனல்

அதிகாரமதுவந்து சேரிலெவருக்குமே
யதிகவல் லமைகளுண்டா
மாடையாபரணங்கள் சேரிலெவருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவுசெல்வது சேரிலெவருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாஞ்
நெஞ்சமகிழ்விதரணஞ் சேரிலெவருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவுபத்தியது சேரிலெவருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்கபருவமது சேரிலெவருக்குமே
துய்யமண வாசையுண்டாம்

மதிசேரிலங்குமுத மலராதிருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯

## அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்.

சுற்றமொடுதாலுகம் பினபேருமின்பமாய்ச்
சுகமுரிற் புரவியமையுந்
துய்யதருமங்களொடு கீர்த்திப்ரதாபந்
துலங்கிறைற் சிவிகையமையும்
கொற்றவர்கண்மெச்சவே பரராசர்கெடிவெற்றி
கொண்டுவரி லாஞ்னையமையுங்
குறையொன்றிலாமனிறை புகழ்பெற்றவீரர்முன்
கூறுங்கை வாளமமையும்
உற்றவகையிவையெலாம் வேந்தர்சன்மானமுட
னுதவாமலே பெற்றிட
னுறைகொண்டநாடகந் தன்னில்வருகோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள்கோலமுஞ் சரியென்றுசொல்வர்காண்
மணவாள நாராயணன
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௰

## பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்றால் வருநன்மை.

தந்தைதாய்வாக்ய பரிபாலனம்புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறுதவிரதமும் பொய்யாவசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ்மரபினோர் செய்தொழின்முடிப்பதுந்
தேவதா விசுவாசமுந்
செய்ததோர்பாசுரா மன்கவசகுண்டலஞ்
செயராம னெடுவீடுமன்

அந்தமிகுசொல்லரிச் சந்திரன்மாபலி
யடற்றரும னொடுபகீரத
னருளபிரகலாதனிவர் போற்பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரர்போற்றவளர் சேஷகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௧

## சூதுமுதலியவற்றால் வருந்தீமை

சூதுபெறுவித்தையும் பாதாரமோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காதபுத்தியு மடங்காதவார்த்தையுஞ்
சொல்லிச்செயாததிறமும்
தீதுபொறுவஞ்சமு மதங்களும்பிறருடைய
திரவியந் தனிலாசையுஞ்
சிந்தையகமெனுமகங் காரமும்பெற்றபேர்
சீர்களன் றிசகன்றுனை
மீதுபொருவாலிசக ரன்குமரன்சிசுபாலன்
வென்றியுக் கரன்வில்வலன்
விந்தைபொருதுரியோத னன்சனகன்முன்பெற்ற
விசமுற்றிருப்பர் கண்டாய்
வாதுபெறுதானவரை போதுமொருதிகிரியாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௨

## சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

தடவரையரசன்மீது விழிபிழுஞ்சோளமது
சன்னசம் பாவாமோ
சந்தமுப்பாட திருந்தாலுமெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ

கடலெலாநிறைவெள்ள மாயினுஞ்சுவைபெற்ற
காவிரியினூ ற்றாகுமோ
காகங்கள்கோடிதொனி செய்தாலுமொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்றபேய்ச்சுரை சொரிந்தபழமுந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்றசாதியுங் கனவயதுமேன்மையும்
பலகூட்டமுந் தேசுமார்
வடிவதிகமன்றுகுண மேயதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## செல்வத்தால்வருமுயர்வு

செல்வமதுசேரிலோ வெங்குபேர்வேங்கடத்
திரளாகில் வேங்கடனுமாஞ்
செயல்கொண்டவேங்கடா சலனுமாமையராந்
திரளைய ரவர்களாகும்
நல்வரிசைகொடுதான டத்திடுங்காரிய
நயந்தரு தாகுமப்பா
னல்லோலையின்னாக்கொ டொப்பமேலொருவசன
நவிலுமுன் கப்பமிடுவார்
சொல்வன்மைவாவென்ற பேர்வாருமென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்றதேவரீ ரவர்களாங்காலுமுன்
றொழுதெழுந் தருளுமென்பார்
பல்விதம்பெறுபரம லோபியர்கண்மிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வறுமையால் வருமிழிவு

துதிக்கின்றமனைவியுங் குறைசொல்வடந்தைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடுமனமெலியும் மேனிவேற்றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்றபுத்தியு மழுங்கிடுங்கல்விபோ
முதாரத்தி லதிகபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தை சொல்லார்
வுத்தரமு மொருவர்கேளார் [சொன்ன
விதிக்கின்றவுகைத்தி லெல்லாருமிகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்றன்
மேன்மையேதறிவேது குலமேதுநலமேது
வித்தையே தெவரறிவர்காண்
மதிக்கின்றவன்பதம் போற்றிலவைசேருமோ
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. க௯

## உடனே கண்டிக்கப்படுபவர்கள்.

முடிகொண்டகொலையாளர் களவினோர்சாதிநெறி
முறைமைவழு கின்றதியோர்
மூர்க்கமுறுபகையாளர் வெகுசனவிரோதியர்கண்
மொழிமாறு கோளுரைப்போர்
மிடிகொண்டபேரைக் கொடுத்துளோர்கற்புடைய
மெல்லியரை மேவுமயலோர்
விசுவாசகாதமிரு செய்குவோர்துஷ்டமா
மிருகக்கண் மிக்கபிணிகள்
கடிகொண்டவிஷமுடன் செய்யானவென்னவே
கருதுபன் மூன்றுவகையுங்
கண்டவுடனேபின்னை யெண்ணுதுகண்டித்தல்
கருணைமனு நீதிகண்டாய்

வடிகொண்டதெள்ளமுத மனையருணசிலனை
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனை
வாதவேங் கடராயனே. க

பொறாத்துக் கண்டிக்கப்படுபவர்கள்.

கண்டுவிருபந்தனைத் தள்ளுவோர்குருசாமி
காரியக் குறைசெய்குவோர்
காணவிடத்திற் பழித்துளோர்வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடுதந்தைதாய் சுற்றமுடனுநிலைந்
தவிராத கலகமிடுவோர்
தம்முடையவலுமையா லெளியோர்வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அண்டிவருதுஷ்டரொடு கூடிவினைசெய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோன்மூன்றுபிறை கண்டபின்கண்டிப்ப
தரசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவுநின்றமலர் தண்டுளபமார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடராயனே.

என்றுங் கண்டிக்கப்படாதவர்கள்.

தூதாகிவந்தபேர் பிக்ஷுகருபதியர்
ஞதிபெற்ற தந்தைதாயார்
சொல்லுமாசாரியார் புரோகிதர்புராணிகர்
அகந்தந் தோகமடைவார்
வேதாகமங்கற்ற வைதிகர்தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையாலுயர்கின்ற கவிராஜர்சுந்தரனா
வீரமா பிணிலுயர்ந்தோர்

தீதானவெம்பிணி யடைந்துளோர்வறுமையோர்
சிறுவரொடு தனைநம்பினேர்
செய்யுமிவர்பதினெண்மர் மதியாதகுற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால்
வாதாடியெதிர்செய்கை மன்னர்நெறியன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. கஅ

இவர் இதனால் வெல்வரெனல்.

வேந்தருடனேவேந்தர் வாதுவரிலேகொடிகொள்
வெற்றிகொண்டே செயிப்பார்
வீரருடனேவீரர் வாதுவரிலாயுத
விதத்திலே செயிப்பார்
போந்திடும்யோகியர்கள் வார்த்தையுசிதத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புல்லர்க்குவாதுவரின் மரபெலாம்வசைசொலிப்
பொதுவிலக் காற்செயிப்பார்
சாந்தமணிவேசியர்கள் வாதுவந்தாற்பாத
சங்கிதமொடு செயிப்பார்
சரசகவிராசர்பிர சங்கத்திலேவாது
தன்னைச்செயிப்பர் கண்டாய்
மாந்தளிரைநிகர்மேனி ராதையதிமோகனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ககூ

இக்குற்றத்தாலிதுபயன்படாதெனல்.

செயல்கொண்டமானமது பங்கமாகுற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுணவின்பரச மில்லாதமங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன

இயல்கொண்டகீர்த்திமரி யாதையில்லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்றபோதுதவி செய்யாதபேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்டவிழியினாள் பேரிளம்பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண்டொருவருக் குரையாதபேர்வித்
கற்றென்ன மறக்கிலென்ன [தை
வயல்கொண்டபயிர்மேனி புயல்கொண்டகளமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨0

இவையெல்லாமளவுபடினுமாசையளவுபடாதெனல்

பொங்குநதிமணலுமா காயத்தினெல்லையும்
பொழியுமழை யின்றிவலையும்
புடவியிசைவருசனமு மடவியிசைவளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்
திங்களுடனுற்றதா ரகைகணமுமுன் பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண்பனமுமுனை நினையாதபலமூடர்
சென்மமுங் கடலாழமும்
அங்கசன்கணைபுரியு மோகமுங்கவிராச
ரருள்பெற்ற புத்திபலமு
மளவுகண்டாலுமோ மனிதருறுமாசைதனை
யளவிடக்கூடாதுகாண்
மங்கைமிதுலாபுரி மடந்தைமகிழ்நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௧

## இன்னார்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகுகாமுகர் தமக்குமுறையில்லைவஞ்
சகர்க்குமரி யாதையில்லை
கட்டுண்டகள்வருக் குறவின்முறையாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறிபூசுரர் தமக்கருள்செயாரில்லை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானியர்க்குவரு சாதிகுலமொன்றில்லை
வீரர்க்கு மனபயமிலை
போகமிகுயோகிக்கு வினைசெய்குவாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்குநேயமில் லாரில்லைசெல்வரைப்
போற்றிலா வொருவரில்லை
மாதவொழில்கண்டுமன மகிழாதபேரில்லை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. உஉ

## இது இவ்வாறாயின் இதுவாமெனல்.

எழுதினதுசொல்வதே ராயரொப்பந்தனக்
கிசையுமவ ளேரம்பையா
மிடர்வேளையுதவுமவ னேகன்னன்வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமனமறியுமவ னேயூகிமந்திரிநற்
பயபக்கி னென்றங்கையாம்
பசியிற்கிடைத்ததே யமுதமாந்துயிலினேர்ப்
பட்டதே புஷ்பசயனம
நிழறந்துகாத்ததே கற்பகந்தாகந்தி
னீர்தந்த தேகங்கையாம்
நிறைபிணிதவிர்த்ததே சஞ்சீவிதன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்

# திருவேங்கடசதகம்.

மழைமுகிலெழுந்தனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மணதிருவுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## இவர்க்கிது தெய்வமெனல்.

திருபுரிவோரியர் தமக்குப்பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்கடெய்வமாந் துஷ்டருக்கென்னிலே.
இவையே தெய்வமாகும்
நீதியுடையோர்க்குப் பயந்தீர்த்திரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காததரித்திரர் தமக்குக்கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனைவர்க்குமறை யோர்தெய்வமம்புவி
தனக்கரா னேதெய்வமாந்
சகலர்க்குமாசாரி யன்றெய்வநாரியர்*
தமக்குநா தன்றெய்வமாம்
மாதவம்புரிஞானி யர்க்குநீதெய்வமா
மணவாள நாராயணன்
மணதிருவுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௯

## இருண்டாயினு மிதுவில்லாவிடிற்பயனில்லையெனல்.

எத்தனைபொருட்சுவை யிருக்கினும்பக்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடிசம்பளந் தருகினுஞ்சன்மான
மில்லாத சேவகமென்ன
சித்ராதிலீலைபல செய்யினுமிதமுடனே
சேராத சுகமென்ன
செம்பொன்மிகுசெல்வமுண் டாயினும்பயிர்கொ
செயமிலா வளமையென்ன

[ண்ட

வித்தையுள வெல்லாம் படிக்கினுங்குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்த்துளசியில்லாத நந்தவனமெனவே
விளங்குமென் பார்கள்கண்டாய்
மத்தகசராசன்மகிழ் விசயநரசிங்கமே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௫

இது இச்சிறப்படையினும் பயனில்லையெனல்.

காட்டிலெண்டஞ்செடி தழைத்தென்னகாஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கைரநாணலெல்லா மலர்ந்தென்னகாகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்னநீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
வற்பருக்கதிகாரம் வந்தென்னபேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடுகொடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன
நீதியறி யாதமூடர்
நிறைசெல்வராயென்ன ஞானமில்லாக்கல்வி
நெறிபோ லிருக்குமென்பார்
வாட்டடங்கண்ணிபுனை கண்ணிமகிழ்கண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௬

கலியுக தோஷம்.

அப்புவியின்மிக்கமெய்ஞ் ஞானியைக்கண்டாலு
மதுவுமொரு வேஷமென்பா
ராகமபுராணமது நூல்விரும்பார்கள்பரி
யாசகதையே மெச்சுவார்

கம்பமிசையொருகோடி காணமிட்டாலுமது
கண்கண்டு வித்தையென்பார்
கற்பனையலங்கார மாக்கவிகள்பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசுவாசமொடு துதிசெய்யினுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்தகலியுகமகிமை நின்னையுஞ்சிலபேர்
நவின்றுகுறை சொல்வர்கண்டாய்
வம்பவிழ்மலர்ச்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. உஎ

அரசரது நன்றியறியாமை.

அரசரைக்கண்டபின் காரியக்காரருக்
கதிகபரி தானமுதவி
மதிகாரமொன்றினைப் பார்ப்பவரிடத்திலு
மதுக்கொட் டிரட்டியீந்தும்
கருதரிநிலுவைப்பணந்தவணைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செலவெழுதார்க ளுட்டார்கடேறுவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட்டுக்காரர் வைவார்கள்கொல்லரோ
வெயிலிடை நிறுத்திவைப்பார்
விதமாகுமவரவர்க ளொல்லாஞ்சபாசென்ன
மெய்யாய் நடந்துகொளினும்
வரிசைபெறுதுரைகளவ ருருமைசற்றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. உஅ

## கவிவாணரருமை யறிவில்லாமை.

கற்பனையலங்கார மாக்கோவைபாடினுங்
கனவரிசை யொருபச்சடம்
கலம்பகங்கூறினொரு துப்பட்டிபின்னைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொருளிலாவென்னி லுறுமாலைமடலுக்கு
நாணயமதாயொருபணம்
நல்வண்ணமென்னிலொரு சாப்பாடியோலையெனி
னன்மைதரு தாம்பூலமாம்
அற்புதம்பெறுகவிக ளென்னிற்பளாபளா
வதிவெகு மானமாகு
மப்படியுமாயிரத் தொருவரென்றுலெங்க
ளருமையெவ ரறிவர்கண்டாய்
மற்பொருதபல்லரொடு முற்பொருதவீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨0

## இதனையிவரன்றி யிவரறியாரெனல்.

சீர்த்தனைய னின்பெருமை பாகவதரல்லாற்
சிரிக்குறவர் தாமறிவரோ
கீர்த்திப்ரதாபமது வித்தரணிகரல்லாது
கெட்டலோ பியரறிவரோ
சேர்த்தமருவிக்யான நீதிமன்னவரலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்யபகவற்கீதை மெய்ஞ்ஞானியல்லாது
சென்மபீசர்களறிவரோ
கோத்தமணிமாலையை மங்கையர்களல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோகமகிமைதனை நாகரிகரல்லாது
கூறுமேபடிக ளறிவரோ

வார்த்தையுசிதத்தைமந் த்ரிகளன்றியறிவரோ
மணவாள நாராயணன்
மனதிருறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௦

## பயனில் சொல்லினிழிவு.

அகமென்றுதன்னைப் புகழ்ந்தபேயுந்தந்தை
யன்னையர் வருத்தமுறவே
யயலார்தமர்குறவு பேயுமடவார்புத்தி
யனுதினங் கேட்டபேயும்
சுகமென்றுபொதுமாத ரைக்கூடிமனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணைத்துரணகளமற்று முறிகின்றபேயுமுன்
சொன்னதிலை யென்றபேயும்
செகமன்னராமென்ற தலையென்றபேயுமியல்
செய்ந்நன்றி கொன்றபேயுந்
திரளானசபையினிற் பயனிலாவார்த்தையுரை
செய்கின்றபேய்க்குநிகரோ
மகமென்றுகோசிக னழைக்கமகிழ்தூயனே
மணவாள நாராயணன்
மனதிருறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௧

## எல்லைக்கடந்தலின் வருமிழிவு.

அரசர்மேலாணைதனை யெண்ணுதகுடிகளு
மாதாய மிஞ்சசெலவு
மன்புடையபேர்புத்தி கேளாதகோபமு
மளவைக்கடங் காதநாவும்
சரசவகைமிஞ்சவே வந்தபரிகாசமுந்
தனைமிஞ்ச தொழிலாளருந்
தயிரியந்தன்னைமிஞ்ச கவலையுஞ்சாகஸியோர்
தகைமிஞ்ச முறைவழக்கும்

காசரணவயவர் தனைமிஞ்சுதேசமும்
கவியின்மிஞ் சியவெழுத்தும்
கருதுமுறைகேளாத மனையாட்டிபுணர்நாய
கன்புகழையொக்குமென்பர்
வரசரசகவிராஜர் புகழ்வேதகுலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௨

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்.

அண்டருக்கமுதமது சொர்க்கத்தில்வேதியர்க்
கமுதமது சொல்லுரையிலே
யானகவிராஜருக் கமுதமணிநாவிலே
யானினுக் கமுதமுலையில்
பண்டிதர்க்கமுதமது கையிலேவிதரணிகர்
பங்கிலமுதங்கண்ணிலே
பாகவதருக்கமுது காதிலேபரிவுடைய
பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடியருக்கமுத மாமதியமென்வே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரியோர்தமக் கமுதங்குணத்திலே
யுணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டலமளந்தவன் பாதத்திலென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௩

இவர்க்குவிஷம் இவ்விடத்தெனல்.

திருடர்க்குவிடமொரங் கையிலேகாமமிகு
தெரிவைக்கு விடமுலையிலே
தீயபொய்யர்க்குவிட நாவிலேமதமுடன்
திரிவோர்க்கு விடமிதியிலே

கருதரியகோளர்க்கு விடமுதடுவாயிலே
காமுகர் விடங்கண்ணிமேல
கட்செவிவிடங்கள்பல் லடியிலேதேட்கெனிற்
கனவிடங் கடைவாலிலே
அரியதுஷ்டர்க்கென்னி லெட்டிமரமென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக்கெடுத்திடும் பகைவர்வுடமனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிடமல்குலிற் றெரியவசமன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௰௪

இவர்க்குப்புண்ணிய மிதுவெனல்.

உன்னுடையபதசேவை கண்டுபணிகின்றதே
யுடல்செய்த புண்ணியமதா
முறைகொண்டகீழுரையின் சாரங்கள்கேட்பதே
யுற்றசெவியின் புண்ணியம்
தன்னுடையபுத்திர ரளைந்தசோறுண்பதே
சாற்றுவாயின் புண்ணியந்
தத்துவமுணர்ந்தபெரி யோர்தமைக்காண்பதே
சார்ந்தவிழியின்புண்ணியம்
பன்னுமிரவலர்கேட்கு முன்னங்கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரதமங்கைகுண மிக்கபுருடற்குப்
பலிப்பதே பெருபுண்ணியம்
மன்னுமிவைமுன்செய்த புண்ணியமதென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௰௫

## இவர்க்குப் பாவமிதுவெனல்.

திருக்குகற்பனையிலாப் புன்கவிகள்கேட்பதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமையறியாத பேர்கண்முன்சேவகந்
திரிதல்கால் செய்தபாவம்
பரித்தவுபசாரமா தாவிலார்மனையுணவு
பருகலுவின்பாவமாம்
பாவனையுங்கருதி நயமிலாப்பாதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருந்தமிழையறியாத பேர்களிடமேற்கின்ற
தகைமைகை செய்தபாவந்
தன்பெயர்விளக்காத பிள்ளையைப்பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருந்தயாமுன்செய்த பாவவினையெம்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிறுநறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. ௫௰

## இவர்க்கிவையுளவேறு மிவைவேண்டுமெனல்.

அதிவீரனென்னினுந் தந்திரவுபாயமுடை
னுடையவரை வெல்லல்வேண்டு
மாயிரம்வித்தைகற் றாலுமவைநத்தனி
லடக்கமிருத்தல்வேண்டும்
நதிகோடிநீந்தினுந் தானுமோடந்தனை
நயத்தாரை சேரல்வேண்டும்
ஞானதத்துவமுணர்ந் தாலுமனத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
தந்தோர்குபேரனென் றாலுமொருலாபமுறு
தொழிலுடனிருத்தல்வேண்டுந்
துய்யவல்லமையுடைய னெனினுமொருசார்பிருந்
துரைகளைக் காணல்வேண்டுந்

மதியூகியென்னினும்பெரியற்சொற்கொள்வேண்டு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௭

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய்தந்தைகள் சுற்றமேமுதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்னொன்றுமுன்னொன்று பேசியேயவமானம்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள்போலவுட் பகையானவஞ்சகரை
யொருநாளு நம்பவேண்டா
மொருவருக்கிச்சையாய்ப் பொய்சொல்லிப்பின்
சபையிலூமைபோ னிற்றல்வேண்டாம்
சற்றுமேபொறுமையில் லாதவர்கள்சண்டையிற்
றான்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந்தனில்விக்ர மாதித்தனென்னினுந்
தன்னையே புகழவேண்டாம்
மற்றொன்றுமெண்ணாது செய்யவேண்டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இவர்க்கிவை பாவமெனல்.

அரசர்வெகுமானஞ்செய் போதுதடைவருகிலோ
வன்றுவிதி பாவமாகு
மானபெரியோர்பழமை யாய்வந்தநேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்றகாரியங் கைகூடியேபின்பு
தவறில்லை திருதிபாகுஞ்
சற்குணமடைந்தோ ருத்தமரைமுனிவதே
சந்திராஷ் டமதாகுமாம்

கருதியவிருந்தினுட னுண்ணுததனியுணவு
காணுமது வேதுரத்தினங்
கலகமேசெய்கின்ற வீணரைக்காண்பதே
கனவாக்ய வேளைகண்டாய்
பரிசுத்தனெனவந்த காசிபகுலோத்துங்க
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௯

இவர் இத்தீக்கோளாவரெனல்.

ஆரைமக்களைக்கண்டு தங்கள்காரியமெலாஞ்
சொல்லிச்செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சிமெய்
யெனவுந் தோன்றுவோ னவலமாகும்
திறமுற்றகல்வியொடு குணமிக்ககவிராஜ
திரளான ராஜசபையில்
செய்யும்ப்ரசங்கத்திலொருபழுதுசொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருள்பெற்றவிதாணிக ரைக்காத்தனேகரு
ளனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக்கும்போதி லிடர்சொலிவிலக்குவோ
னஷ்டமச் சனியதாகும்
மருவுற்றலர்த்தவம் புயமணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௦

இது இவ்வாறுயின் இச்சிறப்பிற்றுமெனல்.

தரணிமன்னவர்சபையின் மெய்க்கின்றவரிசையே
தனதுபட் டாபிஷேகஞ்
சபைசென்றுமெச்சிக் கொடுக்குமதிகாரமே
சாம்பிராச்ய போகமாகும்

பரிவுடனினைத்தபடி காரியங்கூடிலது
பதினெண் றினிற்குருவதாம்
பந்துஜனவர்க்கங்க ளுடனுணவுசெய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவைகுணாஞ்சிதம் தாய்வந்துசேருந
ளன்றமிர்த சித்தயோக
மன்பானபெரியோர்க டரிசனஞ்செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம்பூவைமுகி னீலமணிவண்ணனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௧

மனிதர்களிலே துஷ்டரும் ராக்ஷசரும் பூதரும்

புண்ணியம்பாவமறி யார்மாதவஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப்போற்றார்கள் பரதிரவியங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொருகாரியஞ் செய்பவர்கள்வலுமையா
லெவருக்கு மிடர்புரிகுவா
ரிரக்கமில்லார்பொய் யுரைப்பவர்வஞ்சிப்பவர்க
ளிவர்கள்ராட் சசர்களாவார்
நண்ணியெளியோர்தமை வெருட்டுவார்வழியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்களெவரையுங் கூடுவார்மிகவுண்பா
நாணமறி யார்பூதர்காண்
மண்ணிலொருமூவடி யிரந்தநெடுமாயனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௨

## மூர்க்கர் முதலியோரியல்பு.

மெய்யானபுத்திபல சொல்லினுந்தன்புத்தி
மேலாகி னென்மூர்க்கனும்
மிக்கபெரியோர்களைத் தாழ்வுசெய்தற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாதகாரியந் தெனினும்பிடித்தபிடி
செய்யுமவனே துஷ்டனுந்
திரளானநன்றிபல் செய்தவர்க்கேயிடறு
செய்பவன் மகாபாதகன்
ஐயாவெனப்பணிந் தாலுமேகோபம
தடங்காத வன்குரூர
னாறுதினந்தீமைபுரி வோனெந்தநாளினு
மடங்காத சண்டாளனும்
மையார்தடஞ்சோலை திகழ்கின்றகளமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. சஅ

## இப்படிப்பட்டவன் இவ்வங்கவீன னுவனெனல்.

காதவழியானநதி மாதலந்துதியாத
கயவனே யீனமுடவன்
கைதந்தவோலைவா சிக்கமாட்டாதவொரு
கசடனே மிக்ககுருடன்
நீதுபெறுதன்களவு கண்டவர்க்குத்தாஞ்
செப்பிலா தவனூமையாஞ்
செயலானதன்மகனை யொன்றெனினுமறியாத
செய்கையுடை யோன்செவிடனும்
ஏதெனினுமொருபேர் விளங்காததேகம
தெடுக்குமவ னேகுரூபி
யென்றெனினுமுன்பாத தரிசனஞ்செய்யாத
வீணனே நீசனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணியார்பனே
மணவாள நாராயணன்

மணந்திரு மறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனை. ௪௯

உலோபியர் வசை.

நசைபெற்றவேதவே தியர்தமக்குதவா
தவின்றலோ பர்க்குநேயன்
நாற்கவிமொழிந்தகவி ராசர்க்குமொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்றகீதமுறை செய்பாடகர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலானமட்டோர சர்க்குமொன்றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்றவிகடகவி ராசர்க்குமுதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாதரபிநயங் கண்டுமொன்றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்றலோபியர் தங்கள்கண்டுரவன்
மணவாள நாராயணன்
மணந்திரு மறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனை. ௫௰

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி.

கண்டபகையாளிமுன் னின்றுபொருதாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடுகள்வருக் காடைகளும்பணிகளுரி
காளுமலேகொடுப்பார்
சண்டமாருதமென்ன வருகின்றபகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட்டடிக்கின்ற மன்னர்க்குவீட்டுத்
தனங்களெல்லாங் கொடுப்பார்
அண்டிவருமெமதூதர் வந்துதான்கேட்குமுன்
னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிமிசையிப்படி கொடுக்கின்றபேர்கடமை
யதிலோப ரென்பதென்னே

மண்டலமும்விண்டலமு முண்டகனிவாயனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௩

## உலோபியர் குணமாறாமை.

தேன்கொண்டதுளியொன்றி னாலேழுகடலெலாந்
தித்திக்கவேசெய்யினுஞ்
செய்யபூமலரினால் வச்சிரந்தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்டமலையெலாங் கைகொண்டவெண்ணை
யாற், கசிவுற்ற மெழுகுசெயினுங்
கயவர்க்குநீதியும் பேடிக்குவீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்டமூடர்க் கிரக்கமுந்தெளிவுற
வுரைத்தாலு மேசெய்யினு
மூமைசெவிடன்குருடன் முத்தமிழ்படிக்கினு
முலோபருக் கீவுவருமோ
வான்கொண்டதேவர்மொழிமலர்கொண்டபாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௪

## மக்களிற்பதரரவ ரிவரெனல்.

கொண்டகடன் வட்டியுட னன்றுபோற்குணமாய்க்
கொடுத்துமகி ழாதபதருங்
கூறுபிணைசாட்சிமுறி யுடன்மறித்தாலுங்
கொடாதொளிக் கின்றபதரும்
கண்டவுடனொருகோடி சொல்லிப்பினொன்றேனுங்
கருதிச்செயாதபதருங்
காணவிடத்தினிற் பழிகூறியவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

பண்டொருவர்செய்நன்றி தனையேமறந்துபின்
பழிசொல்லு கின்றபதரும்
பரமாதராசையால் வசைகொண்டபதரும்
பறந்துமிக வுஞ்சிதறவே
மண்டிவருசண்டப்ர சண்டமாருதமான
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪

இக்குற்றமுடையோர்க்கும்
இது செயல்வேண்டு மெனல்.

கதித்திடும்பகைவரென் றாலுமாபத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறியாதசபை யெனினும்ப்ரசங்கங்கள்
கவிராசர் செய்யல்வேண்டும்
விதித்தமுழுமூடரென் றாலுநல்லோர்கண்டு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யசினமூர்க்கரென் றாலுநல்லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்
அதிர்ஷ்டமிலையென்னினுஞ் சலியாமன்மிக்கதொழி
லதிலே முயற்சிவேண்டு
மசாத்தியமதான கனரோகமென்றாலுமோ
ரவிஷதமதீவர்கண்டாய்
வதிஷ்டரொடுவான்மீக முனிகூறுசரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இதினும் இது மிக்கதெனல்.

சினமூந்திரிந்துதனி யாகியேமிக்கபொரு
ளோடியே வாழுமதிலுஞ்
செல்வரொடுதந்தைதாய் சுற்றமுங்கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுமரியாதையொடு பெருமையறியாதபேர்
தலைமாரி பொழியுமதிலுஞ்

சமமானமேன்மைபெரிகின்றபெரியோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவுபலபல மகாவித்தைசிலசில
கருத்தொடு படிக்குமதிலுங்
கருணைபெறவொருவித்தை யாயினுங்குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சிலரிவையன்றி யவையதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௫௦

இதிலுமிது வென்றியெனல்.

மிக்கதுடிகண்டுளம் வெருண்டுகலைமானையே
வென்றசய மாகுமதிலும்
வெஞ்சினமிருந்துகவ ரும்புலியுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமுதிர்ந்தபே ரிளமாதுகொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்மணிமாலைபுனை வாலாதியூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொருகல்வி யறியாதபுழுமூடர்
சந்தோஷ மாகுமதிலுந்
தமிழருமையறிகின்ற பெரியோர்பழித்ததிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளைசெங்குவளை வாசமலர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௫௧

இதுவிதனை வசப்படுத்துமெனல்.

சிந்தைதெளிகல்வியே லோகவசியம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரியாதையே வித்வசனவசியமாஞ்
செல்வமுறு வோர்கள்வசியம்

எந்தவிதமுந்திரள நல்கும்பணங்களே
யின்பவிலை மாதர்வசிய
மெப்பொழுதுமவர்மன தறிந்துகட்டிக்காத்
திருப்பதே ராஜவசியம்

தந்ததண்டனைகளே துஷ்டசனவசியமாந்
தானமே கீர்த்திவசியஞ்
சாந்தகுணநயமாய் நடந்திடுமொழுக்கமே
சகலஜன வசியமாகும்

மந்திரமெழுத்திட்டு மேயுனதுவசியமா
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௨

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர்
கொள்வரெனல்.

சரணென்றடைந்தவர் தமக்குவருவினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடையசெய்கைபோலெவரையும்பார்க்கின்ற
தகைமையோன் றெய்வபுருஷன்

திரணமெனினும்பிறர் பொருட்காசையில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீரதவினைவரினு மற்பரைப்பணியாத
தீரனே புருஷசிங்கம்

பொருவிலாத்தந்தைதா யென்னினுங்கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர்மனதிற் குறிப்பறிந்துதவுவோன்
புருஷநாயகமென்பர்காண்

மரபெலாமிப்படி புகழ்ந்தகுணசேகரன்
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௩

இச்செய்கையோர் இவ்வழிபெயர் பெறுவரெனல்.

சற்றெனினுமொருகல்வி யறியாதசயவனே
தாங்குமுயர் கொண்டயமாந்
தன்புத்தியன்றிபிறர் புத்தியால்வினைசெயுந்
தகைமையானே பதுமையாம்
கொற்றவர்கள்பகையாற் றூரத்துண்டுதிரிகுவோன்
கூகையுற வானபக்ஷி
கோபமதுதந்தையே யன்றிமற்றோரையுங்
கோபிக்கு மவன்மிருகமாம்
கற்றபெரியோரையெதிர் பணியாதமூடனே
கைகால் முளைத்தசிலையாம்
கண்டவர்களெல்லாம் பழிக்கின்றகோளனே
கனதுஷ்ட ஜெந்துவென்பார்
மற்றவர்களேயமது கனவிலுங்காணாத
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௪

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுதமனையகல் விப்பொருள்படைத்திடிற்
தேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்பமானபுகழ் நிலைநிற்குமிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமதுகொளுமெனும் பயமில்லைகனலினால்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள்பறித்திடக் கூடாதுசோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்ளராற்றிருடவும் முடியாதுவரவரக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞானந்தழையு மாகையாலுனையிதய
சமலத்தில் வைப்பதெளிமாம்
வள்ளலெனவருகின்ற மாடபூசியாதிபன்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௫

## கவிதைச்சிறப்பு.

உரைகொண்டுசொல்வரிசை சேர்த்துபொருளின்ப
வகை யோசைபெற் றேமதுரமா
யுற்றநவரசமுடன் கற்பனையலங்கார
முண்டான யேகவுடமாய்
நிறைகொண்டசீர்தனை விகற்பம்பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின்றசபைதனி லுதாரணமதாகிநிலை
நின்றுபழு தென்றிடாமல்
திரைகொண்டதண்கடலில் வருமமுதபாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொருகவிகொண்டு குலமெலாம்வந்தடிமை
செயினுமது நிகராதுகாண்
வரைகொண்டுபொழியுமழை காத்தருளுமையனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே ௫௬

## தந்திவினைப்பயன்.

திங்களுதயங்கண்டு மலராதிருப்பது
செங்கமல முற்றவினையே
தினகரனையெதிர்கண்டு முகைகொண்டுவாடுவது
சேதாம்பல் செய்தவினையே
கொங்குலவுசண்பக சுகந்தமலர்கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழைகண்டுள மெலிந்திடவருந்துவது
கோகிலஞ் செய்தவினையே
அங்கணுலகெங்கணு மகிழ்ந்தபெரியோர்களுக்
கருளா திருந்துவிடினு
மவர்மீதுகுற்றமது சொல்வரோசேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்

வங்கியந் தருமிசை கனிந்தகனிவாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௭

அரசர் கவிவாணர்க்குச் செய்யுமுபசாரம்.

போசனவசந்தமலர் மாலைதாம்பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடுகவிகையுஞ் சிவிகைவரிவாத்தியம்
பூமியனை தனதானியம்
தூசுலவுதுவசமெனும் வெகுமானசோடசந்
தாதரால் வரவழைத்தல்
தோன்றுமுன்னெழுதல்வந்தருள்கெனத்தழுவுத
றுதித்திட விருக்கையுதவல்
தேசவெகுமானங்கள் செய்தெழுதல்வழிவிடுத
லிறையங்கி காரமேழாம்
நெறிகொண்டபுவிராசர் கவிராசர்பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண்டாய்
வாசவன்பெருவிசய சூதனெனுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. ௫௮

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்.

சந்தனவனந்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்
தரளங்குளிக்குமவ ரதன்மாலையணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலிதாமரை யடுத்துமண்டுகங்
கருஞ்சேறு தன்னையருந்துங்
காமருவுதேமாவின் மிசையிருந்தாலுமோ
காகமது வேம்புறுகரும்
அந்தவகைபோலநல் லோர்தமையடுத்தே
யனேகநாட் பழகிவிடினு

மற்பர்மாமறிகின்ற தறிவதல்லாமன்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடுகணந்தன்னி லவர்பெருமையறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 59

புல்லரைப் பாடும் புலவர்பயன்பெறாமை.

நாவினிற்சொல்லுநய மூங்கண்டுவஞ்சகரை
நட்பென்று வருநேயரும்
நவமதனனென்னவெழில் கண்டுபேடன்றனை
நாடிவரு மடமாதரும்
காவினிலுயர்ச்சியும் பசுமையுங்கண்டிலவு
காத்திருக்கின்ற கிளியுங்
கானலைக்கண்டுபுன லென்னவேயானைக்கொண்டு
கருகியே யேகுமானும்
பூவினிற்பொலிவுடனே மூங்கண்டுகேதகை
பொருந்துதே னுகியளியும்
புல்லர்தஞ்செல்வங்கள் கண்டிறுதிசெய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற்குயில்வேளை வாவெனுங்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 60

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினைசெய்தாலு முனிவோர்கண்மாதவ
மிசைத்தாற் பெருமைபெறுவா
ரிகழ்ந்துவசைசொல்லினுங் கவிராஜாவித்தையா
லென்றுமிகுமேன்மைபெறுவார்
ஏழைமதமாயொன்று வழுவினுந் தூறுகள்செய்
திருவினாற் புகழ்சிறப்பார்
சீரியர்களெப்படி புரிந்தாலுமேற்குமது
சிறுமையோர் செய்யவசமோ

தந்திய துரைநிதப்பியே நடந்தாலுமது
 துணிமைத யாமென்பார்
தாளுமப்படி தவறு செய்யிலேபேயென்று
 தள்ளுமுனி வரர்கள்கண்டாய்
மந்திசெரிபிடபகிரி தன்னிலுறைவாசனே
 மணவாள நாரயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடநாயனே 61

இதுஇல்லையாயின் இதுவிளங்காதெனல்

சந்திரனிலாவிரவு மதுரமில்லாதகவி
 தனையரில் லாதசெல்வஞ்
சற்சனரிலாதவூர் புரவியில்லாதபடை
 தளபதி யிலாதசேனை
பைந்தொடியிலாதமனை பாடலில்லாதவோசை
 பத்தியில் லாதபூசை
பார்த்திபரிலாதபட் டணமபூகமந்திரிகள்
 பற்பல மலாதவாசை
கற்புமில்லாதமலர் சந்ததியிலாதவாய்
 கல்வியில் லாததேகங்
கண்ணியமில்லா நியாயசெறிவில்லாத
 கன்மமும் நேசமில்லா
மார்க்கமிலைவித்வசனை யில்லாதசபையென்பர்
 மணவாள நாரயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடநாயனே 62

சங்கீதச் சிறப்பு,

வபுருசேரியாமன் மணிவெயிருதோன்றுமல்கிழ்
 புளாமலங்கசேட்டை
புரியசமன்பிருதுவ்வை யசையாமன்பிடறுதான்
 பொருப்பிலிம் மாமரியல்பாய்ச்

# திருவேங்கடசதகம்.

சருநிலையகாருண நீதியொளிநிலையின்
றொளிபிறு தப்பிரமைய்த
தாய்யதந்திருமேயாமைச பிடேறுகசயமேவரு
மேதான்றும வினை . . . ய்க
தருமதாரவபுதபக வி . . . சானிகள் முரு
சங்கித வி . . . தியமுற
சகலாக்குமா . . . தாமரைவள்
சாசருண வசனிப்பளிலோ
மருவிரிதழ்பருகவனை பாலுவிருப்புமோ
மணவாள நாராயணன்
மணிதிலகமயலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே

பாதச் சிறப்பு

பரதாளமுஞ்சதி படங்கபி நிதானிசெயும்
பண்புபெறு வோணங்களி
பலராகதியொடு தாளங்கொள்கவிதம்
பாடுவேனே பாடகன்
காதளமேன்மைமுடையதக்திஸ்ஞேமற்
கன்றுழுமைட போகைட்டுவள்
கையின்மேல்விரிபுமம் கைவிழிபிணபிலயம்
கட்டுமமேளப்ததிரம்
சாதாளையமாக்க மாருபிங்கிதப்தகு
சொல்லுமமை ரெயபிசனம்
ரவதநிபெற்றநடைப்ப சங்கமநில்லேவதுதொனி
செதரியாத சமையேபசமை
தாளமுடையாகி டைபிறொதனே
மணவாள நாராயணன்
மணிதிலகையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

நாடகச் சிறப்பு

சகந்தபரிமளஸ்தர பூஷணலங்கிருத
சோபெருஸ் திபுவேண்டு

தோகையர்களும்பரி சனங்களுங்கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிருந்தால்தாரிக் கம்புமென்முதலான
மேன்மையேயோ லின்பரசயாம்
வேஷங்களக்கமுஞ் பாஇயுப்பாஷையும்
வெவ்வே றிருத்தல்வேண்டும்
புகழ்ந்தபதமிங்கிதம் பரிகாசவிடங்கள்
புண்ணிய கதாப்ரசங்கம்
போற்றுபாவனைமிருகாகதைகளுஞ்சுருதி
புகழ்ந்திகை ற பாதகமை
மகிழ்ந்திடுஞ்சபைதலை சபையென்றுசொல்வர்காண்
மணவாள நாராயணன்
மணிதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே 65

விநோத வித்தைச் சிறப்பு

சத்திகணபதி துர்க்கை சரஸ்வதியோகாளி
சாமுண்டி யென்மூர்த்திச்
சங்கவியாஜெயகண்டி டக்கைகைத்தாளங்கள்
சத்தமொடு மிகமுழக்க
சித்ரமிகுமாத்திரைக் கேளின்முறையங்கமுறை
செப்பிமுறை பத்துமுறைகள்
செய்யுமுறையபத்து சாதுசஜ்கரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரிஸ்தம்பன தாதியாபஷ்டாங்க
விதமா மயேந்த்ரசாலம்
மிகுமந்த்ரசாலமுதலானசெப்பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ரநீதி
மத்தகசாரசதே வேந்த்ரனுந்தெரிவனே
மணவாளநாராயணன்
மணிதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே 66

பௌராணிகர்

ஆருக்குமானத்தானைத் தேவை பொருள் சொல்லு
மவனே புராணைதிபுண
ணங்கமொடுகிரகதிலை கணிதமுந்தெரிகுவோ
னருள்புரோகிதபூசுரன்
சீருற்றசமையமெலா மெச்சப்பிரதங்கமுறை
செப்புமவனே வித்துவான்
செய்யுமந்திரயந்த்ர தந்த்ரமொடு
சிலனே மந்த்ரவாதி
ஏருற்றகல்விகுண மேன்மைபோதங்க
ளிசையுமவ னாசாரியு
னென்றுமவாசொற்படி நடந்தாயபக்தியோ
டிருக்குமவனே சீஷனாகும்
மாருக்குவேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங்கடராயனே

மருத்துவ னியல்பு,

திரமானசாஸ்திர முணர்ந்தொருசிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகாலஞ்சாதி தேகங்குணம்பிணி
திறக்குமா றுந்தெளிந்து
காமானநாடிமுத லெட்டுப்பரீட்சையுங்
கண்டுகலி கங்கியாழுங்
கணகுளிகைபஸ்பமொடு சிந்தூரஞ்சூரணம்
கருதுலேகியதயிலமாம்
பாமானநன்மருந்துங் கொடுத்துசிதமாய்ப்
பத்தியமுவெளிதாகவே
பரிவுபெறுமாரோக்கியஞ்செய்துதிரளாசை
பகராத பண்டிதனென்
வரமானதன்வந் திரிக்குநிகர்செல்வர்காண்
மணவாள நாராயணன்

மனைதிலுறை நயலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 68

ஈகைர்மருத்துவனுக்குச் செய்யுமுறைமை

சேர்க்கின்றநகைரோக மூற்றால்வைத்தியன்
தெய்வமாங் கேட்டதெல்லாங்
தீரக்கொடுப்போமென்பர் நிருமிப்பிணிபோன்று
செப்பினு லன்றுகுருவாம்
பார்க்கின்றகுளிகையறு தந்தபின்
பாதிலுரு வாணபின்பு
பண்பாவை துணைவறு நோக்கியஞ்செய்தபின்
பார்க்கின்ற மைத்துனனுமாம்
எர்க்கின்றமற்றைநா ளையன்மறுகாளினி
விசைக்குக்கட னெனிமறுநா
ளெதிர்வரிற்பன்கையாளி யாகுமிப்படியென்று
மீவர்கிலருண்டெண்டாய்
மார்க்கின்றதானமொடு வளர்கின்றவள்ளலே
மனைவாள நாராயணன்
மனைதிலுறைநயலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 69

ஆராயாதுசெய்யு மெழுவாரைடயுங்கதி.

நீதிவழுவாவகை வழக்குரைப்போர்களு
நிறைநந்தி வினைகளெல்லா
நீங்குபரிகாரமுறை செல்குவோருப்பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்
சோதிடஞ்சொல்லுமபு மோகிகருமூலகங்
துதித்தசெங் கோல்வேந்தரும்
தூயவுபதேசதே சிகருமவர்சிஷருஞ்
சொல்லுமியவோழுமேபரும்
ஆதிமறைநூலுறைசெய்த விதமாராய்ந்
தறிந்துசெய்தி யாதுசெயிலே
வடைக்கலப்பொருளொக் கவர்ந்திடும் பேசினு
மகேதுவாக சடைவர்கண்டாய்

## திருவேங்கடசதகம்

மாதிரமெங்கெங்கடல் வளர்க்குநெடுமாயனே
மணவாள நாராயணன்
மணிதிருவரையலர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங்கடாயனே

### நித்தியகருமச் சிறப்பு

கருணைகளொழுகிடவே சந்திவந்தனமுடன்
கருதுஜப தவோமமுங்
கடவுளோர் பூசையுஞ் செய்துவேதாகமக்
கல்வியது முறைபடித்துத்
தருமத்தியானமுங் கருமநீதியொடு
தங்கதுதயப் புகழிருடன்
குறைவுசெய்யாமா மாயனைப்போற்றியே
சந்தியொடு கருமங்களை
பரிவுடன் நின்றிருக் கோயில்வலமாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பண்பாசைக்கோர நயந்தில் மலர்களைநீத்து
பரியுட சேவமிழ்த்து
மருவியேவாழ்வில் வாழ்க்கையேவாழ்வுமான
மணவாள நாராயணன்
மணிதிருவரையலர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங்கடாயனே

### குடிவாழ்க்கைச் சிறப்பு

மிக்கதெய்வத்தலமு ஞானகுருபீடமும்
விளங்குமா நதியுமனையோர்
மேவியசிரமமும் நூபிகலைமுந்தனமு
மேலானமுடையநாட்டில்
முக்கணிதருஞ் சாலை நீர்வளக்குடிவள
முயங்குபயிர் வளமுமாய்
செழுந்தனக்குலமுஞ் செழிப்புதாயத்தேர்வீதி
முதலாய் விளங்குமிடம்
தக்கவீதருநீதியோருடைசெல்வமாய்ச்
சார்ந்திடு காமனையிற

தனதானியங்கறவைமுதலானசெல்வந்
தழைத்தென் றானமுதவி
மக்கண்மக்களொடு வாழ்வதேவாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதினிறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 72

மருத்துவர் செல்லத்தகாவிடங்கள்,

தீராதரோகமுடை யோரிடமுமுண்மையது
செப்பாத பொய்யரிடமுஞ்
சீரானவொருவர்பண் டிதமின்றிவெகுவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
ஏராதகோபமுறு மூர்க்கமன்னவரிடமு
மேந்திழையை மனதுபிரியா
விண்பமாமதிவிரக மனகாமுகரிடமு
மெய்ப்படி நலஞ்செய்யினும்
தாராலோபரிட மும்பத்தியத்தனைத்
தாழ்வுசெய வோர்களிடமுஞ்
சகலசனகண்டக ரெனுந்துஷ்டரிடமுமிகு
தனமாரியேபொழியினும்
வாராதிருப்பதே பண்டிதர்கணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 73

நோய்க்கிடங்கொடார் செய்கை

சனிபுதன்றனிலெண்ணெய் வெந்நீரின்மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின்மேலான மங்கையைச்சேரார்
சதாகாலம் வழியிலடைவார்
பனியிலுங்காற்றிலும் மெய்வருந்தார்மடைப்
பள்ளியிற் சேவசமிரார்

பழங்கறியருந்தா ரிரண்டடக்காரொன்று
பலகால முய்விட்டிடார்
கனியொடுகிழங்குகளை யிருந்துபுசியார்பசி
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பர்நீ ரோர்கூட்டுவார்தினங்
காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவரிவர்சொன்ன பேர்க்குநோய்சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை லர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 74

தந்தைமுதலியோராவார் இவரெனல்.

நிலமுடன்சிறுகமுஞ் செல்வமுந்தந்துகட
னிலுமையொன் றில்லாமலே
நிரைகல்வியுமொசெய்து நெறியொடுவளர்க்கின்ற
நேசனே யுயர்தந்தையாம்
தலைம்தியமெனவெ வளர்ந்தபின்செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரியபுத்திரன் போலமருமகளையுங்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலையுணர்ந்துமிகு செல்வமுந்தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பானதந்தைதாய்க் குகவியேயவர்சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழிசெழுஞ்சோலை மலைவளருமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 75

கற்புநல்வ ளியல்பு.

அரிதானமாதவஞ் செய்கின்றமுனிவோ
ரடைந்திடவ ரந்தனைப்பேர்

லடுத்ததர்தமைக்காத்து மிக்கமேலவர்தமை
யடக்குமுன் சக்கரம்போல்
பெரியோரிருக்கின்ற சபையினிற்கவிராஜர்
பேசுமப்ர சங்கமதுபோல்
பேருலகமெய்க்கவரு மநுநீதிமுடிவேந்தர்
பெறுகின்ற மந்திரிபோல்
ஒருகோடிலட்சத்தி ரங்களுடனேவே
யுதித்தசக் கிரோதயம்போ
லுபயகுலசுத்தனும் மகிமைதன்போலவே
யொருபிள்ளை போதுமலனுல்
மாபெலமன்னவே வடையுமென்பார்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. 76

சகோதரரொருமை,

தனதுபட்டத்தினைத் தம்பியர்க்கீயுனத்
தந்துகவி முத்தமையுமன்
தமையனார்வருமளவு பரிமிதமாகவே
தயைபுரி யுந்தம்பியும்
கனகமப்பாவித்து தாய்மனைக்கோலவே
கருணைசெய் திடுமதனியும்
காலுமுன்றந்தபோற் றிருவடிகள்பணியுங்
கனிட்டனிட மிணைபாட்டியும்
தினந்தினம்பரிவாகி யம்மையேயென்றுபேர்
செப்புங் கொழுந்தனுந்
சேர்ந்துவாழ்கின்றபோ லிந்தயுகத்தினிற்
றெசரத குமாரர்கண்டாய்
வனசமலர்கமழ்கின்ற வாவிசூழ்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. 77

## திருவேங்கடசதகம்.

### வேட்டகத்தியல்பு.

காரிகைதனைத்தந்த மாமனார்மனைதனிற்
சருவைமருமகன்வந்திடுந்
கண்டவுடனேசார வுபசாரமாகவே
கனிவிருந்துகள் சமைப்பார்
சேருநாள்மூன்றினிமைப்பட்சத்திற்
செலவிற்குசந் தீரவியம்பேறும்
நினைந்திடைப்பெருமைகுறையுங்காரியங்களுஞ்
செய்யவொப்பாரத்தமுதலோர்
ஆருமிமனையோர்கண்மதி யாணோர்சரசபரிகாச
மதிகமா மனைவியுடனிலே
வன்புடன்சொன்னபடி கேளாளிதானகைய
லாதிபொருள்களையள்ளவோ
வாருமென்றலைவேக வசனமுஞ்சொல்வர்காண்
வளைவாள கராயனை
மனதிலுறையலர்மேவு மங்கைமணமாளனே
வரதவேங் கடராயனே.

### மானங்கெட்டுப் பிழைப்பவரியல்பு.

சேசமுறுமெழுமிதனை துறவினன்மருகன்மனை
திலென்று வாழ்ந்தபேரும்
நேரிழையுனைத்தந்த மாமனார்மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரியகல்வித்தெரி யாமூடர்பேரிற்பர
பத்தகவி சொன்னபேரும்
பெருமைபேய்க்கள்ளக் கடன்கேட்டுப்
பிழைத்துயிராமந்தபேரும்
ஏசலுறுபணையாளர் தங்களைமூலைவரகட்டி
யேவல்செய் கின்றபேரு
மீனமதுபார்ப்பரோ வபிதசனைன்றிவர்க்
கென்சாறு வடிபுகண்டாய்

வாசமலர்மங்கைமுடி கொண்டுவளர்களமுரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே. 79

கற்புடைய பெண்டீரியல்பு

ஓதுஜபபூசைகட் கினியருற்றேவல்க
ளுகந்துசெய் போதுகுருவா
முறைகொண்டசாரசஞ்செய் போதுமன்மதனு
மொழிந்தவ ளோத்தெய்வமாம்
நாதனைக்கருதியவ னுண்டகுறையமுதாக
நவில்வேச யம்தசமாம்
நதியாடபலநோன்பு தேவதாதரிசன
நயந்தபல விரதமுடன்
பாததரிசனமாக்கொள் சத்தியாய்ப்புத்தியாய்ப்
பத்தியாய்க் கடவிறுழும்
பாரென் றுகலைவிலுறை செய்கிறுஞ் செய்கின்ற
பதிவிரத மாக்கயான
மாதர்புகழ்கீர்த்தியே ஞகிபெற்றதல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே. 80

நற்பெண் டீரியல்பு.

பஞ்சணையுகைருகாக நின்றுவாவென்றபின்
பரிவினுட னெருகில்வந்து
பாக்கிலைமடித்தகரு ளிக்குமெத்தையில்வந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர்சூடியிசை பாடிவிளையாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியேதயிருவோரு முறையிபருகினியபுட்
குரலோசை மிகமுழங்க

செஞ்சமகிழ்வொடுசோதக காணைகரிகரவுபரி
கேயாதி கேளிதன்னால்
சிறையயிர்த்தபோகசம் போகவைபோகமுட
னீங்காத போகமுகவும்
வஞ்சியினலாதுமனைய வேறொன்றின்மகிழ்வோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௬௧

## திப்பெண்டூ ரியல்பு.

ஐயருக்கமுதுபடை யென்றுவந்தாய்நீயு
மாண்பிள்ளையென றென்னவோ
வரிசியெங்கேபானை சட்டியெங்கேயென்ப
ளவள்சொன்ன வகைகளெல்லாம்
கையயேவகொண்டுவந் தாலுசமைக்கப்
படாததலை நோருதென்று
பாயிற்கிடப்பள்சின மாயென்றுபேசினல்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பள் சற்றடித்தானஞ்ச
தின்கிறேன கூகூவெனத்
தெருவிடுதோறுமுறை யிருபெண்டிருண்டெனிற்
றீயகமன் வேறுமுண்டோ
வையகம்புகழ்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௬௨

## பரத்தைபரியல்பு.

கொச்சியுறுமஞ்சள்வங் காளமுறுபச்சையிலை
கூறுசண் பகமெட்டுடன்
கூடியசலங்குவஞ் சனமாடிபொற்கண்டை
கொண்டயென் டுதிருடுத்தி
கச்சிளங்கொங்கைமேற் சந்தபரிமளகளப
கஸ்தூரி குழமுமென்னக்

கனகநவரத்னமய பூஷணம்பூண்டுகிளி
கையின்மிசை யேந்திநலமாய்
பச்சைமயில்போலிரதி வேளைக்குமிகுசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையினிலிருக்கும்
பாத்தையுண் டாவென்றால்
வச்ரதரனுலகத்த ரம்பையிலுமதிகமா
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனே. ௮௯

## பிரௌடை வேசையரியல்பு.

ஆசையுடனொருவிதக புருஷன்வந்தான்பி வு
மாசார வுபசாரமா
யாசனங்களிலெழுந் தருளுமென் றருகிருந்
தழகான வொருகட்டிலே
நேசமொடுதாம்பூல முதவியேயவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீதியாயந்தநாள் வந்தநீர்பின்னெனை
நினைக்கிலீ ரென்கொலென்று
பேசரியசங்கீத சரசசல்லாபமா
சங்கமொடு ரதிகேளியில்
பிரியமுடனேயணைத் தின்பமாயுசிதம்
பெறிற்பிரௌடை வேசையென்பார்
வாசமிகுபைந் துளப மாலையணிமார்பனை
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனே.

## பாத்தையரிழிவு.

விலைமாதர்விடுசவு ளிக்கடைபடுக்கையது
மேவுமனை போதவம்பலம்
மெத்தையதுசந்தியிற் டாறையவராங்கமோ
மேவியபடித் துறையதாம்

கலைமருவுமவ்வல்கு லோடம்பிறகொங்கை
  கடையிலெனு மிச்சமபழம
கனிவாய்படிக்கமிகு தடைகடண்ணீர்ப்பந்தல்
  கட்டுகத விக்கம்பமாம்
மூப்பிமார்புவாடகைக் குகிரையிலடையேணியவர்
  மோகமெனி லெட்டிக்கனி
மொழிமுயற்கொம்புசே ரிவபுவெந்நரகை
  முறைமையிலை கண்டிருந்தும்
மலைவுபெறுவார்களவர் வார்த்தைதக்குரேயனே
  மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
  வரதவேங் கடாயனே. ௮௫

## சரீர நிலையாமை.

ஆசர்யமீதினி லெறிந்தகசிலைகாற்றினை
  யடைவைக் கிடுதருகதி
யனலிட்டமெழுகுவயி லிடையிட்டவெண்
  ணெய்சுறியாற்றிடை யெழுந்தகுமிழி
மோகவிகாரமொடு வருகின்றபின்னல்விழி
  மூடுதுயில் கண்டகனவு
மோதிவருகாற்றினிற் றீவிழுந்திடுபஞ்சு
  மூச்சோடு கின்றபதுமை
மீகாமனில்லாத கப்பல்கண்ணிமைபோல்
  விளங்குவரு தேகமிதனை
மெய்யென்று மெய்யெலாம் பொய்யென்று திரிகின்ற
  விழலனென யாளநினைவாய்
மாகாளமுகிலனைய மெய்யனே துய்யனே
  மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
  வரதவேங் கடாயனே. ௮௬

## நல்வினைசெய்வார்பேறு.

ஓதுமாதாபிதா குருதெய்வவிசுவாச
  முடனிதி பூசைசெய்வோ

குற்றபாதாரசோ தாமாகுவோரிந்த
மொருவர்க்கு மெண்ணிலாரோர்
பூதயவுள்ளோர் சகாயமேபுரிகுவார
பொய்யிலா வாய்மையுடையோர
பூர்வமாந்தருமபரி பாலனம்பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தவனம்
பாதையிடமண்டபங் கூபந்தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பாயிவர்க்குமலை போல்வந்தவினையெலாம்
பனிபோல நீங்கிடுமாய்
மாதவமுருந்தவுண் பாதமேபெறுவர்காண்
மணவாள நாராயணன்
மணதிருவுறையலர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௯

## மாதர் அவயவமயக்கு.

சிக்குமிகவோராறுகின்றகுழன் முகிலென்பர்
திரளுநக்கைத மாறுகவாய்
செம்பவளமென்பாசனி கொண்டுநீர்மாறுத
சிறுநாசி குமிழென்பர்
பக்குமதல் றிவிழு னில் றமுலையானதோற்
பையமக மேருவென்பர்
பாராதகாகத்துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவருாத்தமுஞ் சியுமென்பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாதநாகந் தருஞ்சிறியவின்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைமக்கருங்கடலிலெலே வீழாமலாளுவாய்
மணவாள நாராயணன்
மணதிருவுறையலர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯௰

## நிதியின்பெருமை,

வித்தைதயேசெய்திடுங் குருபீடமொன்னவரை
வென்றுவரு கின்றதளவாய்
மித்திரர்கள்பகைவரா மேலவர்களையார
வித்தைபுரி தாருபதி
புத்திகலைமேசொல்லு மதிமந்திரியாவரும்
புகழ்கின்ற வதியகுளிகை
புனைகழுவைமாதருக் கதிருபவின்பம்
பொருந்தவரு காமதேனு
சித்தனும்பெருமையே செபுமாசுதாளமொழிவு.
நிலைசெயத் தக்கக்ஷாத்ரம்
சேர்ந்தபிடியென்கிற வாதங்கசேகரி
கிளைத்தலெவ் லாங்கொணர்ந்தே
வைத்திடுங்குலதெய்வ நிதியன்றிவேறு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௮௧

## உயர்ந்தபொருளிருக்குமிடத்து இழிந்த பொருளிருக்குமெனல்,

கோகனகமலர்மலர்ந் தூறுகின்றவாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந்தொனிசெயுந் தேமாவனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமெனவுலகம் புரந்தமன்னவர்சபையி
லீனமன் னருமேவுமா
திலகுமாணிக்கங்கள் விற்கின்றகடைவீதி
யிப்பாலை மணியும்விற்பார்
பாகனையமதுரரச லளிகப்ரபந்தகவி
பாடுமன்னவர்கள் சபையில்
பழங்காடிதனிலும் புனித்தயுன்கவிசொல்லும்
பாவலரு முண்டுகண்டாய்

மாகனக முறையுமொரு மணியணியு மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௯௰

## சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர் பெறாதோ ரிவரெனல்.

சோதிகாந்த மணி மாலையிடை நூலுங்
துலங்குமணி யாய்விளங்குஞ்
சுலப்பமுந்தன்னுடன் சேர்ந்தசெம் பொன்னுஞ்
சுருப்புபோலவே மிகக்கும்
வீதியெருக் குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மறைந் தாதொளிவிடும்
மிகவுஞ்செழுந்தேன் சொரிந்தேவளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறா
ஆதலாற்சேர்ந்தஇனங்களைப்போலவே
அவனியிலிருப்பவர் சிலபேர்
யார்சொல்லினுந்தங்கள் சுயம்குணம்விடாமலே
யமைவுற்று வாழ்வர்சிலபேர்
மாதாலிலைகொண்டொரு குழுந்தேறுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௯௧

## வல்லோர்க்கும் பல்லோரால் தாழ்வு வருமெனல்,

பரராசர்வச்ரமகு டந்தகர்த்திடுசத்தி
பஞ்சமெத்தைக்கு நாணும்
பணிராசர்வணிமுடிகள் சிதறநடமிடுதோகை
பச்சோந்தி யாலடங்கும்
கூரராசமார்த்தாண்ட சந்திரகிரணங்களொ
ட்செவிஞன்மறைபடுங்
கனகடபுரிவிகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிடு கண்டேயமாம்

சுராசகங்காப்ர வாகநிருந்றுமொரு
துய்யசிலை யான்மறிபடுஞ்
சொல்லின்றபெரியோர்க ளென்றுமுமற்பாரற்
றேல்விகொடு முறிவர்கண்டார்
வாராசதசரத மகாராசபுத்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடாராயனே. ௧௨

## நல்லோர் புகழ்நிலை பேறு.

விசயன் மனுவுடனிட்சு வாகுகுசநாபன்
விகுட்சிரகு காகுஸ்தனும்
மிருமம்மரீஷன் மாந்தாதன் முசுகுந்தன்
விசானை திணைபிந்து
சசிபிந்துவொடுதிலீ பன்னரிச்சந்திரன்
சர்வதா மன்பாதனே
சந்தனுநளன்சத்ய விரதன்பகிரதன்
சகரனொடு தானசன்னன்
தெசரதன்மருத்துப் புரூரவன்சென்னியே
திரிசங்கு முடன்யயாதி
சத்யசேனன்வீர சேனன்ருதுபணனிந்த்ர
சேனன்விதுரன்பாண்டவர்
வசுதேவனாதியோர் புகழுன்றிநின்றநிலை
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடாராயனே. ௧௩

## தீயோர்பழிநிலை பேறு.

ஆரனொடுபாணுகோபன் திரிபுரத்திரனோர்
தாரகனை மதுகைடவர்
துந்துமஹிடாசுரன் சம்பரசலந்தரர்
தூஷணன் திரிசிரகரர்

வீராவணகும்ப கர்ணனிந்திரசித்து
மிகுகனக னிரணியாட்சன்
வெய்யவாதாவிவில் வலனுடன்சூர்ப்பநகை
மேவுமசமுகி தாடகை
தாருலவிசிசுபால தந்தவக்கிரர்சரா
சந்தனோ டடல்மீசகன்
சகுனிதுரியோதனன் கஞ்சன்முதலாயினோர்
தங்களைய யிர்த்தியல்லால்
வாரிசூழ்புவியிலவர் கொடுமைநீங்கின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯௪

## வானப்பிரஸ்தன் முதலானோரியல்பு

ஒருபொழுதுமலமே யிராமனைற்கருமங்க
ளுரைவுடன் செய்துமனையா
ளொடுகொடுமின்றியும் பாதங்கள்போற்றிவரு
முறைவன்வானப் பிரஸ்தன்
கருமமுடனுபாசக வற்கைதுதிசெய்து
காயமுதலாறுமூன்றுங்
கருதாமலொருபோது சுவைநீக்கியேயுண்ட
கருணையோன் சன்னியாசி
இருவினையுமவைசெய்க துஞ்செயச்செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மென்னியசாதிமா பும்பலவுமுன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
அருமலையவதாத மெய்ஞ்ஞானியென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯௫

## உத்தமர் முதலானோர்கள்.

விநயமுடனன்னமுஞ் சுகமுமேஷமுமென்ன
வித்தையுற தன்னையறிவார்
மிருதாவைமுகற்பகங் கன்னன்மலர்போன்மரபு
வித்தமாய் விளங்கவருவார்
பனிமிரெனடுகொளிகோங்கமுக மென்னவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ்சூதமும் பாடலமுமன்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினமருவினிமொழுத் தொடுமனவெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவாதனைமயாதி யங்கமாப்பார்க்கவே
சிக்கைதனிலாய்ந்துபுவிமேல்
மனிதருத்தமர்கண்மத் திமராதர்மூவர்காண்
மணவாள நாராயணன்
மனைதிருவரைநபலர்மேனு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௯௬

## தேசங்களின் பெயர்கள்.

அங்கமத்திரமாள வங்காளவங்கேகக
யாரியம் பாரசீக
மாந்திரமாடமே கன்னமிடங்கரை
மலந்திரெபாடு சேகிதருகம்
கன்னைதிகழ்காஸ்மீர மச்சங்கொடங்
கருகமே சூரசேனங்
கலிங்கமொடு வங்காள கோபாளசிங்களன்
கனத்ததுளு வங்கோளம்
கொங்கணப்பேடங்கிரி கர்த்தகப்புளிந்தங்
குளிக்கங் கிராடமகமின்
கூர்ச்சரயப்பாம்வி தற்பகாம்போஜநர்
கோசலஞ் சிந்துகொளடம்

வங்கமும்பணிகின்ற கருடகிரிவாசனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனை
வாதவேங் கடராயனே. ௬எ

## தேசமுதல் அண்டமளவாக நிற்குநிலை.

ஒட்டமுறுசாதகஞ் சவ்வீரபாஞ்சால
மோங்குமிட தங்கடார
முகந்தாஞ்சொனகஞ் சீனகாந்தாரமோ
டிலாவுமலை யாளவங்கம்
இட்டமுறுத்ராவிடஞ் சோளபாண்டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குகாதக்கண்ட மாதிநவகண்டங்க
ணைய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசைபெற்றதி லேழுபூலோகமிரு
தாதிமே லேழுலோக
முதலமேயாதிகீ ழேழுலோகங்களிவை
யனைவயுமீ ரேதாண்டமாம்
மட்டிலாவண்டங்க ளுன்றிருவயிற்றிலுரு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடராயனே. ௬அ

## பதினெண்கணங்களிவையெனல்.

தேவருடனசுரர்கள் சித்தர்கடயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந்தருவர்கின் னரயிராக்கதபூதர்
திதிகவே காளர்முனிவோர்
மேவுகிஞ்சையருக ரக்காரியக்கதே
மேலுமா காசவாசர்
மிகுபோகபூமியோர் மூதலாயபதினெட்டு
விதமான கணநாதரும்

பூவையர்களுக்கன்று துகிசெயுந்திருமலை
புகழ்ந்துகோ ணேரிமூழ்கிப்
போற்றிபுன்சந்நிதி வணங்கியே துதியாத
புனசனன முஞ்சனனமோ
மாவலியணிந்தசெம் மணிமகுடபாதனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯௬

## பரமபாகவத ராவாரிவரெனல்.

சுகனொடுவியாசன் பராசனொடுசவுனகன்
றுய்யநா ரதன்வசிட்டன்
ஆங்கவான்பீஷ்மா விருக்குமாங்கதன்
சுக்ரீவன் மாருதி
தருமிட்சுவாகுவீடணனுடன் பிரகலா
தனொடுசே னைவிஜயனே
தருமனொடுமுசுகுந்த னக்குரூரன்முனி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிகிரிசடைமாது பாஞ்சாலிசபரிமு
னைமுத்திடக் கஜராஜனே
யாதிராமாநுஜன் றிருவரங்கத்தமுத
னாழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறுமூன் றெண்டர்பாதமே துணைகொண்ட
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அடியார்க்கு வருஞ்சிறப்பு

உனதுபாதம்போற் றுமடியார்கள்சிந்தையி
லுவந்துநீ யென்றுமுதவா
லுன்னுடையதிருமாக ரென்மருஞ்சேர்வரவ
ருற்றநா ணிதிகள்சேரும்
கனிதிகள்சேர்ந்திடத் தனதன்வருவானுடன்
கருணைபுரி நேயன்வருவான்

## திருவேங்கடசதகம்.

காதலனெடுத்ததா லுமையவருவளன்னையாய்
கந்தன்வரு வன்மருகனால்
தனதுமாமன்வருவ னாசன்வரலாலமரர்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ்செழிக்குமருள் சேருமதவன்றியே
தவமொன்று செயல்வேண்டுமே
வனசரோருகமலர் மடந்தைவளர்களமுறின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௱க

## அவையடக்கமும் பிரார்த்தனையும்

ஒருமலையெடுத்துமலைத சாந்தவாமனோதேவ
ருபயபத சேவைதனையே
புளங்கொண்டுவெண்மணியில் வாழுமுத்தாரையு
னுமவுநா ரணபாரதி
பொருமலைபெருங்கங்கை யுங்காளியாறும்
பொருந்துகடல்போற் புலவர்கள்
புகழ்சபையிலெனதுவேங் கடசதகநீதியெனு
புகலவரு நூறுகவியும்
பகவினுடனேவருங் கேட்டியன் றமிழின்மேற்
பக்ஷமுவைத் தாளவருவாய்
பாலகன்புன்சொலைக் கேட்டுமேயகிழுமவர்
பார்மீதி லன்னையலவோ
வருபவர்களிக்கநல் வாழுதவுநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௱உ

## திருவேங்கடசதகம்.

முற்றிற்று.